தமிழக சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 188, 189, 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Supply of Electric Energy

*192 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether on 29-1-1968, Madras and Mysore States have entered into an agreement in regard to the supply of electric energy; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) மைசூரிலுள்ள ஷாராவதியின் உற்பத்தி நிலையத்திலிருந்து தமிழ்நாடு மின் இணைப்பிற்கு 1968-ம் ஆண்டில் 30 கோடி யூனிட் மின்சக்திக்குக் குறையாமல் வழங்கப் படுவதற்குத் தமிழ்நாடு, மைசூர் அரசாங்கங்கள் 21—1—1968 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டன. இதில் முதல் 10 கோடி யூனிட் வரை ஒரு யூனிட்டிற்கு 5 காசு வீதமும் 10 கோடி யூனிட்டிற்கு மேற்பட்டும் பெறும் மின்சக்திக்கு ஒரு யூனிட்டிற்கு 4·5 காசு வீதமும் தொகை செலுத்தவேண்டும்.

திரு. கே. வினயகம் : நமது மாநிலத்தில் போதுமான அளவிற்கு மின்சாரம் உற்பத்தியாகக்கூடும் என்று சொல்லப்படுகிறதே, அப்படியிருக்கும்போது மைசூர் மாநிலத்தை ஏன் கேட்கவேண்டும் ? நெய்வேலியிலுள்ள அனல் மின்சாரத்தை நாம் வேண்டுமென்றே வாங்கவில்லை என்ற புகார் இருக்கிறது. காரணம் மத்திய சர்க்காருடைய அமைப்பாக இருப்பதாலே, அது உண்மையா ? அங்கே இருக்கும் மின்சாரத்தை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தேவையையொட்டி மைசூர் மாநிலத்தில் மின்சாரம் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. நெய்வேலியிலிருந்து வாங்கக்கூடாது என்ற எண்ணம் அல்ல. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரித் திட்டம் இருப்பதால் அவர்களுக்குத் தேவைப்பட்டது போக 150 மெகாவாட்தான் மிச்சப்படுகிறது. அதனை எடுத்துக்கொள்ள முடிவிற்கு வந்திருக்கிருர்கள். நெய்வேலியில் மின்சாரத்தை வாங்குவதற்குத் தேவைப்படுகின்ற செலவுக் கணக்கையும் மைசூர் மாநிலத்திலிருந்து மின்சாரத்திற்கு ஆகின்ற செலவும் ஓரளவிற்கு ஒரே அளவுதான் இருக்கிறது. நாட்டுக்கே பொதுவாக நிலக்கரி மிச்சமாகும். அவர்கள் 10 கோடி யூனிட்டுகளுக்கு 5 காசு வீதம் தரலாம் என்று சொன்னுர்கள். பிறகுதான் 4·5 காசு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மொத்தத்திலே பார்த்தால் 4·66 காசு வருகிறது.

[1968 ஆகஸ்ட் 30

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, 29—1—1968-ல் மைசூர் மாநிலத்திற்கும் இந்த அரசுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுதான் கட்டணக்குறைப்பு ஏற்பட்டதா ? அல்லது முந்தைய அரசு இருந்தபோதே கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது 29—1—1968-ல் அல்ல, 21—1—1968-லே ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் மின்சாரக் கட்டுப்பாடு இருந்தபோது, அவர்களுடைய உற்பத்தி குறைவாக இருந்தபோது 9 காசுக்குத் தந்தார்கள். தேவை குறைந்தவுடன் நிறுத்திவிட்டோம். ஆனுல், ஷாராவதி திட்டத்திலே அதிகமாக உற்பத்தியாயிற்று. தேவைக்கு மேலும் தொடர்ந்து கொடுக்க முன்வந்தார்கள். $3\frac{1}{2}$ காசுக்கு, $4\frac{1}{2}$ காசுக்குத் தருகிறீர்களா என்று பேரம் பேசினுேம். பிறகு உட்கார்ந்து பேசுகின்ற அளவிலே செலவுகளை எல்லாம் கணக்குப் பார்த்து 4·5 காசுக்கு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. 5 காசுக்கு ஒத்துக் கொண்டால்தான் எல்லா சாராருக்கும் கட்டுபடியாகும் என்பதால்தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : தஞ்சையிலே தனியார் துறையில் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற கம்பெனியை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அவர்கள் நடத்தியபோது மின்சாரக் கட்டணம் அதிகமாக இருந்தது. இப்போது அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டபிறகு பம்பு செட்டுகளுக்கும் இறைவைகளுக்கும் சலுகைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றுலும் அரசு எடுத்துக்கொண்டதற்குப் பிறகு மின்சாரவாரியத்தில் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதோ, அந்த அடிப்படையிலே இறைவைகளுக்கும் மற்றவைகளுக்கும் தரப்படுகிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெய்வேலியிலிருந்து மின்சாரம் வாங்குவதைவிட மைசூர் மாநிலத்திலிருந்து வாங்குவது மலிவாக இருக்கிறது. ஆகவே, நீண்டகால அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கோ அல்லது 10 ஆண்டுகளுக்கோ அவர்களிடம் கேட்டு ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடிய முறையில் யூனிட்டுகளின் விலையைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி நெய்வேலியிலிருந்து வருகின்ற மின்சாரத்தை நாம் வாங்காமல் இருப்பதற்கில்லை. அது மின்சார வேலையை மட்டும் பொறுத்து அமையவில்லை, வேலைவாய்ப்பு பிரச்சினை, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சூழ்நிலை இவற்றையும் பொறுத்திருக்கிறது. நாம் வாங்காமல் இருந்தால் அங்கே மின்சார உற்பத்தி குறையும். இதனுல் நிலக்கரி வெட்டி எடுக்கவேண்டிய நிலைமை இருக்காது. இதன் காரணமாக சுரங்க வேலைத் திட்டம் தடைபடும். அது தடைப்பட்டால் பொறியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலையில்லாமல் போய்விடும். அந்த வகையிலே அனல் மின்சாரம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. எதிர்காலத்திலே மின்சாரம் பெறவேண்டுமென்றுல் நெய்வேலியிலிருந்து பெறக்கூடிய வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. இப்போது 400 மெகாவாட் உற்பத்தித் திறன் இருக்கிறது. அடுத்த ஆண்டு 600-க்கு செல்லக்கூடும். எதிர்காலத்தில் 1,000 மெகாவாட் பெறவேண்டுமென்றுலும் இரண்டாவது சுரங்கத்தின் மூலம் பெறலாம். முதலிலே அவர்கள் $7\frac{1}{2}$ காசு கேட்டார்கள். பிறகு 6·68 காசு கேட்டார்கள். நாம் ஒப்பந்தம் செய்துகொண்டதன் பேரில் 5·9 காசு கட்டுபடியாகக்கூடிய அளவிற்கு இருக்கிறது. தேவைப்படுகிற அளவிற்கு மைசூரிலிருந்து மின்சாரம் வாங்கக்கூடிய காரணத்தால் நெய்வேலி மின்சாரத்தை விட்டுவிடுவதற்கில்லை.

திரு. பி. வேலுசாமி : நாம் உற்பத்தி செய்கின்ற மின்சார செலவு வெளியிலிருந்து வாங்குகின்ற மின்சார செலவு—இரண்டுக்கும் இருக்கக்கூடிய செலவை விட குறைவாக தனிப்பட்ட தொழிற்சாலைக்கு மின்சாரம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக அந்தந்த தொழிற்சாலையைப் பொறுத்து அமைகிறது. வேளாண்மைக்கு 8½ காசு என்று கொடுக்கிறார்கள். பல தொழில்களுக்கு 30, 40 காசுகள் என்ற அளவுக்கு கொடுக்கிறோம். ரா மெடீரியல்ஸ்க்கு மின்சாரம் 30 சதவீதம், 40 சதவீதம் என்று தேவைப்படுகின்ற தொழிலைப் பொறுத்தவரையில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகின்றது. இரும்பு, அலுமினியம் உற்பத்தி செய்கின்றவற்றிற்கு சலுகைகள் கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று மின்சார வாரிய நிதி நிலை அறிக்கைபற்றி விவாதம் நடக்க இருப்பதால் அதில் பேசும்போது பேசிக்கொள்ளலாம். அடுத்த கேள்வி 193.

*193 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that there would be no electricity power cut this year ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நடப்பு ஆண்டில் மின்சார வெட்டு இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. விநாயகம்.

திரு. கே. விநாயகம் : அதுதான் மின்சார வாரியத்தைப்பற்றி பேசப் போகிறோமே அதில் பேசிக்கொள்ளலாம்.

Students of Madurai Colleges

*194 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there was any strike during the month of July 1967 by the students of Madurai Colleges ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) whether the demands of the inmates of the hostel were conceded in time ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். மதுரைக் கல்லூரியிலும், தியாகராயர் கல்லூரியிலும் நடந்தது.

(இ) சேலம் மாவட்டத்தில் உருக்கு ஆலைத்திட்டமும் தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் நிறைவேற்றப்படல் வேண்டும் என்னும் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குப் போகாமலிருந்து விட்டனர். கல்லூரி விடுதியில் சில மேம்பாடுகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காக மதுரைக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் இருந்துவிட்டனர்.

(உ) தியாகராயர் கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்த வினா எழவில்லை. மதுரைக் கல்லூரியில் நிர்வாகிகள் மாணவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

THIRU K. VINAYAKAM : Sir, how many working days were lost by such kind of strikes and will any arrangement be made to compensate the loss of working days ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரைக் கல்லூரியைப் பொறுத்தவரையில், 525 மாணவர்களில் 250 பேர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கல்லூரி விடுதிகளில் சில பல வசதிகள் குறைவாக இருக்கின்றன, அந்த வசதிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற கோரிக்கைக்காக வேலை நிறுத்தம் செய்தனர். அதன்